தொடர்பாக தொலைக்காட்சி மற்றும் செய்தித்தாட்களுக்கு எழுதி, விவரம் கேட்டு அதற்குப் பிறகு என்னுடைய தீர்ப்பை இந்த அவையில் அறிவிக்கின்றேன்.

[ஆ] வாயைத் துணியால் கட்டிக்கொண்டு அவைக்கு அ.இ. அ. தி. மு.க உறுப்பினர்கள் வந்திருப்பது குறித்து.

திரு. ஒய். வெங்கடேஸ்வரதீட்சிதர் : பாயின்ட் ஆப் ஆர்டர். சபாநாயகர் அவர்களே, இந்தக் கேள்வி நேரம் முடிந்ததும் இங்கே சில உறுப்பினர்கள் (வாயைக் கைக்குட்டையால் கட்டிக்கொண்டு அவைக்கு வந்திருக்கும் அ.இ.அ.தி.மு.க. உறுப்பினர்களைச் சுட்டிக்காட்டி) ஜைன மதத்தினராக ஆகி விட்டனரா என்று தெரியவில்லை. ஜைன மதத்தினர் தான் வாயை மூடிக்கொண்டு வருவார்கள். ஆனால் இப்போது இவர்கள் எல்லாம் மதம் மாறிவிட்டார்களா அல்லது கட்சி மாறிவிட்டார்களா என்பது தான் கேள்வி. இவர்கள் இப்படிச் செய்வது கட்சி மாறியதற்காகவா அல்லது மதம் மாறியதற்காகவா? அதற்குப் பதில் சொல்லுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நல்ல 'Point of order'. யாரும் காதுகளை மூடிக்கொள்ளவில்லை என்று நம்புகிறேன்.

[இ] தாதர் எக்ஸ்பிரஸ் இரயிலில் பயணம் செய்த 3 பெண்களைச் சிலர் கற்பழித்துள்ளதாக வந்துள்ள செய்தி குறித்து.

திருமதி பாப்பா உமாநாத்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இரண்டு தினங்களுக்கு முன்னால் இரயிலில் சென்ற 3 பெண்கள், எட்டு குண்டர்களால் கற்பழிக்கப்பட்டு இருக்கக் கூடிய கோரமான நிகழ்ச்சி சம்பந்தமாக முதல்வர் அவர்களுடைய கவனத்துக்குக் கொண்டுவந்து, அதற்குத் தீர்வு காண முயற்சிக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன். கடந்த ஆகஸ்ட் 17, வெள்ளிக்கிழமையன்று கேரளா எர்ணாகுளத்தைச் சேர்ந்த 3 பெண்களிடம், 8 பேர் கொண்ட சமூகவிரோதக்கும்பல் சென்னைக்கும் அரக்கோணத்துக்கும் இடையே இந்த நிகழ்ச்சியில் ஈடுபட்டு இருப்பதாகத் தெரிகிறது. பொதுவாக குண்டக்கல்லுக்குச் செல்லக்கூடிய பெட்டியாக இருந்ததனால் கூட்டம் குறைவாக இருந்ததாகவும், அந்த கம்பார்ட்மெண்ட்டில் ஆண்களை விட பெண்கள் அதிகம் இருந்ததாகவும் அந்த நேரத்தில் இரயில் புறப்பட்டவுடன் அந்த 8 குண்டர்களும் அந்த வண்டியிலே ஏறி அந்தப் பெண்களை மற்றப் பெண்களுக்கு முன்னால் பகிரங்கமாக பட்டப் பகலில் கற்பழித்து இருக்கக்கூடிய ஒரு அநாகரீகமான செயல் நடந்து இருக்கிறது என்பதை நான் வேதனையோடு இங்கே குறிப்பிட விரும்புகிறேன்.

1990 ஆகஸ்டு 22] [திருமதி பாப்பா உமாநாத்]

10-05 மணி.

இந்த நேரத்தில் கடப்பை மாவட்டம் நுகர்வோர் கூட்டுறவு சங்க உறுப்பினரான திரு. இராமச்சந்திரன் என்பவர் அந்தப் பெட்டியில் இருந்துள்ளார். அவர் பேட்டியும் தந்து இருக்கிறார். குண்டர்களைத் தடுத்தபோது அவரும் தாக்கப்பட்டிருக்கிறார். மற்ற பலரும் தாக்கப்பட்டிருக்கிறார்கள். அவமானத்திற்கு அஞ்சி அந்தப் பெண்கள் புகார் செய்ய விரும்பவில்லை என்று கூறப்படுகிறது. இன்றைக்கு இருக்கக்கூடிய சமுதாய சூழ்நிலையில் அது இயற்கைதான். அதற்காக சம்பவமே நடக்கவில்லை என்று காவல் துறை கைவிரிப்பது பரிகாரமாகாது என்பதைப் பணிவோடு தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். பெண்கள் மத்தியில் பெரும் ஆத்திரத்தையும், எழுச்சியையும் இது ஏற்படுத்தியிருக்கிறது என்பதையும், இரயிலில் பயணம் செய்வதற்கே அஞ்சக்கூடிய அளவிற்கு நிகழ்ச்சிகள் நடந்திருக்கின்றன என்பதையும் அரசுக்கும், தமிழக முதல்வர் அவர்களுக்கும் தெரிவித்து, இது விஷயமாக விசாரணை நடத்தி உண்மை நிலையை அறிய நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

திரு. இராமச்சந்திர ரெட்டி சாட்சியம் அளிக்கத் தயாராக இருப்பதாக எங்களுடைய ஆந்திரா மாநில மாதர் சங்க அமைப்போடு தொடர்பு கொண்டபோது தெரிகிறது. மற்றும் பலரும் தயாராக இருப்பார்கள் என்று தெரிகிறது. ஆகவே இந்தச் சம்பவத்தைப்பற்றி பொது விசாரணை நடத்த முதலமைச்சர் அவர்கள் ஆணை பிறப்பிக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : தலைவர் அவர்களே, அம்மையார் அவர்கள் இங்கே எடுத்துச் சொன்ன இந்தப் புகார் குறித்து காவல் துறையினர் விசாரித்த அளவில், அன்றையதினம் இரயிலில் எந்தப் பெட்டியும் காலியாக அல்லது நான்கைந்து பயணிகளோடு சென்றதாகத் தகவல் இல்லை. ஒவ்வொரு பெட்டியிலும் பயணிகள் நிரம்பி வழிந்தார்கள் என்றும், எனவே இந்தப் புகாருக்கு ஆதாரம் இல்லையென்றும் சொல்லப்பட்டிருக்கிறது. அம்மையார் குறிப்பிட்டதைப் போல நான் அந்தக் கூற்றை அப்படியே நம்பி அவர்கள் எடுத்து வைத்த இந்தக் கருத்தை அலட்சியப்படுத்திட எண்ணிடவில்லை. ஆனால் ஆந்திர மாநிலத்தைச் சேர்ந்தவர், கண்டதாகச் சொன்ன ஒருவரிடத்திலே விசாரித்தபோது மேற்கொண்டு அவர் சொல்வதற்கு மறுத்துவிட்டார் என்ற தகவல் வந்திருக்கிறது. இது குறித்து ஆந்திர மாநிலத்தில் விசாரணை நடைபெற்று வருவதாகத் தகவல் வந்திருக்கிறது. தமிழக அரசு சார்பிலும் இரயில்வே துறையோடு தொடர்பு கொண்டு அந்தப் பெட்டியில் எத்தனை பேர் பயணம்

செய்தார்கள், இது போன்ற சம்பவம் பலர் மத்தியில் நடைபெறுவதற்கு வாய்ப்புகள் உண்டா என்பதைப் பற்றியெல்லாம் அரசு அறிந்து, முடிந்தால் அவைக்கு, இல்லாவிட்டால் நாட்டுக்குக்கூறும்.

(அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள் நின்றுகொண்டிருந்தனர்).

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள் இருக்கையில் உட்கார வேண்டும். இதுபோல நின்று கொண்டிருப்பது அவையின் மரபுக்கு முரணானது மட்டுமல்ல; அவையின் நடவடிக்கைக்குக் குந்தகம் விளைவிப்பதாகும். ஆகவே, அனைவரும் உட்கார வேண்டும். அப்படி உட்காராவிட்டால், மூன்றாவது நாள் இதுபோன்று நடைபெறுகிறது என்ற முறையில் நடவடிக்கை கடுமையாக எடுக்க வேண்டியிருக்கும். (குறுக்கீடு) அனைவரும உட்காருவார்கள் என்று நம்புகிறேன். அனைவரும் உட்காருமாறு கேட்டுக் கொள்கிறேன். (குறுக்கீடு) அனைவரும் உட்கார வேண்டுமென்று கட்டளையிடுகிறேன். இப்போது அனைவரும் உட்காராத காரணத்தால் அனைவரையும் வெளியேறுமாறு கட்டளையிடுகிறேன். (குறுக்கீடு)

(அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள் பேரவைத் தலைவர் மேசைமீது சில தாள்களை வைத்து விட்டுப் பேரவையினின்றும் வெளியேறினர்.)

(ஈ) உறுப்பினர்களுடைய சில இருக்கைகள் மாற்றம் செய்யப்பெற்றுள்ளது. தொடர்பாக 20—8—1990 ஆம் நாளன்று தலைவர் அளித்துள்ள தீர்ப்பு குறித்தும் சில உறுப்பினர்கள் அவைக்கு வந்து சுதந்திரமாகச் செயல்பட முடியாமல் அடைத்து வைக்கப் பெற்றுள்ளதாகக் கூறப்படுவது குறித்தும்.

திரு. எஸ். திருநாவுக்கரசு : தலைவரவர்களே .....

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அமருங்கள். இதிலே திரு. திருநாவுக்கரசு பேசுவதற்கு இடமே கிடையாது. (குறுக்கீடுகள்) அனைவரும் வெளியேறுமாறு கட்டளையிடுகிறேன். (குறுக்கீடுகள்) யாருடைய பேச்சும் பதிவேட்டில் ஏறாது. அனைவரும் வெளியேறுமாறு கட்டளையிடுகிறேன். அல்லது என்னுடைய கட்டளைக்கு உட்பட்டு முதலில் உட்காருங்கள், திரு. திருநாவுக்கரசு.